
உ

சிவமயம்



மானிப்பாய் — நவாலியூர்

உயர்குடித் தோன்றல்

## இராசமணி மகேசன்

அவர்களின்

சிவபதம் அடைந்தமை குறித்த

# நினைவு மலர்

19-7-1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராசமணி மகேசன்

தோற்றம் :
2-2-1909

மறைவு :
19-6-1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்க்கை வரலாறு

திருமகளுங் கலைமகளும் பொலிந்து விழங்கும் நவாலியூரிலே வேளாண் குலத்திலே வன்னியசேகர முதலி வம்சத்திலே தோன்றிய கதிரவேலுவின் மகன் நாகமுத்து என்பவர் கதிராசிப்பிள்ளை என்னும் பெண்ணை விவாகஞ் செய்தனர். இவர்களுக்கு மானிப்பாய் மெமோறியல் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றிய றிச்சேட் சபாபதி, வணிகத்திலீடுபட்ட விஸ்வலிங்கம், சின்னத்தம்பி, அஞ்சல் தலைவர் கதிரவேலு, தனது நாமம் பூண்ட வியாபார நிறுவனத்தை ஆக்கிய வைத்திலிங்கம், இளையதம்பி, செல்லப்பா ஆகிய ஆண்களும் சின்னப்பிள்ளை, வள்ளியம்மை ஆகிய இரு பெண்களும் மக்களாவர். வைத்திலிங்கம் என்னும் அண்ணல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் F. A. வகுப்பில் சித்தியடைந்து கொழும்பு பிறவுன் (Brown) அன் கம்பனியில் கடமையாற்றிப் பின்னர் என். வைத்திலிங்கம் கம்பனி லிமிட்டெட் என்ற நாமத்துடன் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வியாபாரத்தை நிறுவி நடத்தினர். அவர் அராலி அம்பலவாணரும் நாகம்மையும் ஈன்றெடுத்த விசாலாட்சி என்னும் கற்புக்கரசியை மணந்து இராசமணி, பொன்மணி சோமசேகரன் என்பவர்களைப் பெற்றும், பின்னர் சிதம்பரப்பிள்ளை, தங்கம்மா ஆகியோரது புதல்வி நவமணியை கடிமணஞ் செய்து தற்போது வைத்திலிங்கம் கம்பனியின் பிரதம நிர்வாகஸ்தராகிய பாலசுப்பிரமணியம் என்பவரைப் புதல்வனாக அடைந்தும், சதுமலை தம்பு, சுந்தரம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லம்மாவைத் திருமணஞ் செய்து வைத்திய கலாநிதி இராமச்சந்திரன், லண்டனில் ஆசிரியரான சிறீஸ்கந்தராசா M. Sc., காலஞ்சென்ற மகேந்திரராஜா, விக்னராஜா, வைத்திய கலாநிதி நாகேந்திரா பெண் ஜெகதீஸ்வரி, பொறியியலாளர் சிவதாசின் மனைவி இரத்தினேஸ்வரி, கலாநிதி விக்னராசா பெண் மணிமேகலை ஆகியோரையும் ஈன்றெடுத்தனர்.

வைத்திலிங்கம் அவர்களின் சிரேஷ்ட புத்திரி இராசமணி 2-2-1909-இல் பிறந்தனர். அவர் ஆரம்பக் கல்வியை வேலக்கை விவேகானந்த வித்தியாசாலையில் கற்று 3ஆம் வகுப்பில் தேறிய பின்னர் மானிப்பாய் மெமோறியல் பாடசாலையிலும், பின்னர் உடுவில் மகளிர் கல்லூரியிலும், இறுதியாக இராமநாதன் கல்லூரியிலும் கல்வி கற்றனர். மங்கைப் பருவம் எய்தியதும் கொழும் புத்துறை சட்டத்தரணி அப்பாக்குட்டி கல்லையாவை விவாகஞ் செய்து சட்டத்தரணி பாலசுப்பிரமணியம், லண்டனில் தொழில்புரியும் சட்டத்தரணி பாலகிருஷ்ணன், ஆசிரியர் செல்வராசா பெண் பாலேஸ்வரி B. A., காலஞ் சென்ற மருத்துவக் கல்லூரி மாணவன் பாலச்சந்திரன், ஆசிரியர் இரத்தினபாலசிங்கம் பெண் இராஜேஸ்வரி, கல்கத்தா பொறியியலாளர் வெற்பிரகாஸ் ஆனந்தின் மனைவி ரூபாவதி B. A., பாலேந்திரா ஆகியோரை ஈன்றெடுத்தனர். மேற்கூறிய மைந்தர்களின் தர்மபத்தினிகள் முறையே ராணி, ருத்ராணி, சரோஜினி ஆகியோரை மருமக்களாகக் கொண்டனர்.

அன்னாரின் தங்கை பொன்மணியை அவ்வூர் சிவ நெறிப்புரவலர் வைத்திலிங்கம் மகேசன் திருமணஞ் செய்ததின் பேருக ஆசிரியர் நடராசா பெண் மங்களாம்பிகை, அஸ்பஸ்டஸ் சீமந்து தொழிலகத்தின் பிரதம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக அதிகாரி கணேசன், பொறியியலாளரும் நிர்வாகியுமாகிய நடேசன், வைத்திலிங்கம் கம்பனி நிர்வாகி புவனேந்திரன், கிருஷிகப்பகுதி பிரதம பொறியியலாளர் கணேசுவின் மனைவி லலிதாம்பிகை B. A., ஆகியோரைப் புத்திரர்களாகப் பெற்றனர். சொல்லப்பட்ட புதல்வர்கள் முறையே சுபத்திராதேவி, சுபத்திரா, சரோஜினிதேவி ஆகியோரை மணந்தனர். பொன்மணி என்பவர் சிவபதமடைந்த பின்னர், இராசமணி விவாகத்தைச் செய்து முதலியார் மகேசனைக் கடிமணம் புரிந்தனர். இவர்களது இல்வாழ்க்கையின் சின்னமாக 27-4-79இல் திருவடி அடைந்த வரதராஜன் 21-4-50இல் பிறந்தனன். அவர் தம் தந்தை வழி உறவினர் வசந்தமல்லிகாவை மணம் புரிந்தனர்.

கணேந்திரன், வினோதினி, வெங்கடேஷ், அபிராமி, ஈசானி, மைதிலி, தயாபரன், மஹிலா, ராஜினி, உஷா, தர்ஷினி, ஷெட்ஞ, சஞ்சீவ், ஜனனி, சசிதரன், துஷ்யந்தரன், ஹார்ஷினி, ஷாமினி, கிரிதரன், தருணி, பகீரதன் ஆகியோர் அவரது பேரப்பிள்ளைகளாவர்.

சிவபதமடைந்த இராசமணி பிறந்ததும் தந்தைக்குச் சகல சம்பந்துக்களும் வந்தடைந்தன. மகாலட்சுமி தான் உதித்தனள் என்று பெற்றோர், உறவினர், நண்பர்கள் கூறக்கூடிய வகையில் சகல சீரும் சிறப்புகளுடனும் அவரது குடும்பம் உயர்வுற்று வளர்ந்தது. அவர் இல்வாழ்க்கையில் ஈடுபட்டபின்னர் அவரது இரு கணவர்களும் செல்வந்தர்களாகவும், பெருமை, புகழ், கீர்த்தி, செல்வாக்கு உடையவர்களாகவும் வாழ்ந்தனர்.

தாம் ஈன்ற பிள்ளைகளை எவ்வாறு கரிசனையுடன் வளர்த்தனரோ அதேபோன்று தமது சகோதரியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளையும் சொந்தத் தாய்போல் பேணி அவர்களது நலன் கருதிக் கண்ணுங் கருத்துமாக வளர்த்தனர். சுயநலமற்றவராய் மற்றவர்களுக்கு உதவிபுரியும் பான்மையில் சிறந்து விளங்கினர். கரைசேராதிருந்த எத்தனையோ பெண்களுக்குத் தமக்குத் தெரிந்தவர்களின் துணைகொண்டு தக்க மணமக்களைத் தெரிந்தெடுத்த வகையில் அவர்களது இல்வாழ்க்கை சிறப்புற்றன. வறியவர்களுக்கும், மற்றும் உதவி வேண்டியோர்களுக்குந் தாராளமாக உபகரிக்கும் பண்பு நிறைந்தவர். தமது உறவினர்கள், நண்பர்கள் வரும்பொழுது பெருமகிழ்வு கொண்டு அவர்களை வரவேற்று நன்கு உபசரித்து வேண்டிய வசதிகளைப் புரிந்து ஆர்வத்துடன் உரையாடி விழாக் கொண்டாடும் பண்புள்ளவர்.

ஆசார சீலராய் வெள்ளிக்கிழமைகள் தோறும் ஆலயங்களுக்குச் சென்று வழிபடும் நியதி பூண்டவர், தாம் தனித்துச் செல்லாது அவ்வாறு நாட்டங்கொண்ட மற்றையோரையும் தம்முடன் கூட்டிச் செல்லுவதிலும் ஆர்வங் கொண்டவர். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தில் விரதமனுட்டித்து ஒவ்வொரு நாளும் சுவாமி தரிசனஞ் செய்த பின்னரே உணவருந்தும் கோட்பாடுடையவர். தமது கணவர் திருப்பணித் தவமணி மகேசனுடன் தென்னிந்தியாவிலுள்ள பாடல்பெற்ற சகல திவ்விய சேத்திரங்களையும், மத்திய இந்தியா, வட இந்தியாவிலுள்ள புண்ணிய ஸ்தலங்களையுந் தரிசித்து வணங்கியும், கங்கை, காவேரி போன்ற புண்ணிய நதிகளில் நீராடியும், நதிகள் கடலுடன் சங்கமிக்கும் இடங்களில் ஸ்நானஞ் செய்தும், சென்ற ஒவ்வோர் ஆலயங்களிலும் நேர்த்திக்கடன்களைச் செவ்வனே நிறைவேற்றியும் மீண்டனர். இவ்வாறு ஒருமுறையன்று மும்முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத்திரை செய்தனர். ஒருமுறை அவர்களது யாத்திரை 3 மாதங்களுக்கு நீடித்தது. இவர் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் பிள்ளைகளுடன் புட்டபத்திக்குச் சென்று **சுவாமி சத்தியசாயி பாவாவின்** தரிசனம் பெற்று அவருடன் உரையாடும் பாக்கியத்தையும் பெற்றனர். இவற்றால் போலும் இவர் நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் உபாதியடையாது சலனமற்றிருந்தனர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமுறைச் செய்யுள்கள்

## முதலாந் திருமுறை

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே! சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே.

## இரண்டாந் திருமுறை

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணந்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

## மூன்றாந் திருமுறை

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்ந்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்

## நான்காந் திருமுறை

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாந் திருமுறை

என்னி லாரும் எனக்கினி யாரிலை
என்னி லும்இனி யானொரு வன்னுளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே.

## ஆருந் திருமுறை

ஐயினால் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி அன்பு மிக்கு
அகங்கு ழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங்
கையினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்னப்பூர் நடுதறியைக் காண லாமே

— திருநாவுக்கரசு சுவாமிகள்

## ஏழாந் திருமுறை

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாந் திருமுறை

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

— மாணிக்கவாசக சுவாமிகள்

## ஒன்பதாந் திருமுறை

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

— சேந்தனார்

## பத்தாந் திருமுறை

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

— திருமூலநாயனார்

## பதினொராந் திருமுறை

ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தெழுந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றே
காண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டாந் திருமுறை

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்.

— சேக்கிழார் சுவாமிகள்

## பிற பெரியோர் பாடல்கள்

காரிட்ட வாணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண்(டு) இருந்தவெமை வெளியில் விட்(டு)
அல்லலாங்
காப்பிட்(டு) அதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்(டு)
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்
டிடருறவுறுக்கி இடர்தீர்த்(து)
"இரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்துதுயில் கொள்மின்" என்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே!
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே!
சின்மயா னந்தகுருவே!

— தாயுமான சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றென்றே டோவ்வா துரைத்தாலும் – என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும்.

— பட்டினத்துப்பிள்ளையார்

## திருப்புகழ்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி னுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள் நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

— அருணகிரிநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எனது அன்பிற்குரிய பிரியபத்தினி இராசமணி நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் அவரைப் பார்வையிட்டோர்க்கும், துணை புரிந்தவர்களுக்கும், அவர் சிவப்பேறெய்திய பின்னர், அன்னார்க்கு நிகழ்ந்த சமயக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும், மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், விருப்புடன் மற்றும் உதவிகளாற்றியவர்களுக்கும், எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அவரின் ஆத்மா இறைவனது திருவடிகளிலே சாந்தி அடைய வேண்டுமென்று பிராத்திக்கின்றோம்.

நன்றிப் பெருக்குள்ள
முதலியார் வை. மகேசன்
தமக்காகவும் குடும்பத்தவர்களுக்காகவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org